www.tamilarangam.net

கறுப்பு

தேசத்தைக் காக்கும் கரும்படை

கறுப்பு 031

25 ஒகஸ்ட் 2010

தொடர்புகளுக்கு
karuppu.edit@gmail.com

# தமிழீழம் சாத்தியமில்லை! மக்களுக்கும் விளக்கமில்லை! நரிகேசி உருத்திரகுமாரன் அறிவிப்பு!!!

தமிழீழம் என்பது இனிமேல் சாத்தியமில்லை என்றும், இது தொடர்



பாக மக்கள் விளக்கமின்றி இருப்பதாகவும், நாடுகடந்த கும்பலின் முடிசூடா மன்னனாக விளங்கும் நரிகேசி உருத்திரகுமாரன் அறிவித்துள்ளார்.

சிங்கள அரசுக்கான நிதிசேகரிப்பில் ஈடுபடும் கே.பியின் அனைத்துலக நிதிப் பொறுப்பாளர் 'அம்பிகா நகைமாடம்' பே.இன்பநாயகத்திற்கும், நரிகேசி உருத்திரகுமாரனுக்கும் இடையில் கடந்த வெள்ளிக்கிழமை தொலைபேசி உரையாடல் ஒன்று இடம்பெற்றிருந்தது. இதன்பொழுது பிரித்தானியாவில் நிதிசேகரிப்பில் ஈடுபடுவது தொடர்பாக இருவரும் ஆராய்ந்ததோடு, பிரித்தானியாவில் சிங்கள அரசுக்கு நிதி சேகரிப்பதற்கு தனது பாதுகாப்புத்துறை செயலரான ஜனகன் மாஸ்ரரின் (தயாபரன்) உதவியைப் பெறுமாறு பே.இன்பநாயகத்திற்கு உருத்திரகுமாரன் ஆலோசனை அளித்திருந்தார். இதனை ஒட்டுக் கேட்ட கறுப்பின் புலனாய்வுப் பிரிவினர், அதன் ஒலிவடிவத்தை தற்பொழுது எமது ஆசிரியர் பீடத்திடம் கையளித்துள்ளனர்.

தமிழீழம் இனிச் சாத்தியமில்லை என்று அதில் பகிரங்கமாகக் கூறும் நரிகேசி உருத்திரகுமாரன், தமிழீழம் பற்றி இப்பொழுதும் சிந்தித்துக் கொண்டிருக்கும் மக்களுக்கு விளக்கமில்லை என்றும் குறிப்பிடுகின்றார். அத்துடன், சிங்களவன் செய்ய வேண்டிய வேலையை தாங்களே செய்து முடிக்க வேண்டும் என்றும், நரிகேசி உருத்திரகுமாரன் கூறுகின்றார். தொலைபேசிப் பரிவர்த்தனையை ஒட்டுக்கேட்பதில் உள்ள தொழில்நுட்ப சிக்கல்கள் காரணமாக, அது எந்த வேலை என்பது தொடர்பான மேலதிக தகவல்களை எமது புலனாய்வுப் பிரிவி



னரால் பெற முடியவில்லை. இருந்தபொழுதும், இதில் மக்களை கடுமையாக விமர்சிக்கும் நரிகேசி உருத்திரகுமாரன், நாடுகடந்த அரசின் பிரித்தானிய பிரதிநிதியான ஜனகன் மாஸ்ரரின் உதவியைப் பெற்றுக் கொள்ளுமாறும் பே.இன்பநாயகத்திற்கு ஆலோசனை வழங்குகின்றார்.

எம்தமிழீழ உறவுகளின் கவனத்திற்காக இத்துடன் நரிகேசி உருத்திரகுமாரனின் உரையாடலின் ஒலிவடிவத்தை இணைத்துள்ளோம்.

# தமிழகத்தில் ஊடுருவியுள்ள கே.பியின் கையாட்கள்

தமிழகத்தில் தங்கியிருப்பதாகக் கருதப்படும் தமிழீழ விடுதலைப் புலிகளின் முன்னாள் போராளிகளை இனம் கண்டு கைது செய்யும் நிமித்தம், கே.பியின் கையாட்கள் இருவரை தமிழகத்திற்கு சிங்கள அரசு அனுப்பியிருப்பது தொடர்பாக திடுக்கிடும் தகவல்கள் கறுப்பிற்கு கிடைத்துள்ளன. கடற்புலிகளின் முன்னாள் புலனாய்வுத்துறைப் பொறுப்பாளரும், படையப் புலனாய்வுப் பிரிவில் கேணல் சார்ள்ஸ் அவர்களின் ஆளுகையின் கீழ் இயங்கியவருமான நிசாம் மாஸ்ரர் என்பவரும், ஈழநாதம் நாளேட்டின் முன்னாள் பொறுப்பாரான பவான் என்பவருமே, இவ்வாறு சிங்கள அரசால் தமிழகத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர். இறுதிப் போரில் சிங்களப் படைகளிடம் சிறைப்பட்ட இவர்கள் இருவரின் குடும்பத்தினரும், சிங்கள அரசால் பணயக் கைதிகளாக கொழும்பில் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர். அண்மையில் இவர்கள் இருவரையும் சந்தித்துக் கலந்துரையாடிய கே.பி, இவர்களை தற்பொழுது சிங்கள அரசின் உளவாளிகளாக மாற்றியுள்ளார். தற்பொழுது தமிழகத்தில் தங்கியிருக்கும் இவர்கள் இருவரும், முன்னாள் போராளிகளையும், தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்களையும் இனம்காணும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். இவர்கள் தொடர்பாக அவதானமாக இருக்குமாறு தமிழகத்தில் உள்ள உறவுகள் அனைவரையும் கேட்டுக் கொள்கின்றோம்.

**"கறுப்பு - துரோகங்களின் கருவறுப்பு"**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# பொட்டம்மானின் பெயரை தவறாகப் பயன்படுத்தும் வி(நாய்)யகம் குழு



தமிழீழ தேசிய புலனாய்வுத்துறைப் பொறுப்பாளர் ச.பொட்டு அம்மான் அவர்களின் பெயரைப் பயன்படுத்தி, புலம்பெயர் தேசங்களில் குழப்பம் விளைவிக்கும் நடவடிக்கையில் வி(நாய்)யகம் குழுவினர் ஈடுபட்டு வருகின்றனர்.

இறுதிப் போரில் வெளிநாட்டுக்குத் தப்பிச் சென்ற முன்னாள் புலனாய்வுத்துறைப் போராளிகளின் குடும்ப உறுப்பினர்களை பணயக் கைதிகளாகப் பிடித்து வைத்திருக்கும் சிங்கள அரசு, வி(நாய்)யகத்தின் உதவியுடன் முன்னாள் புலனாய்வுத்துறைப் போராளிகளை தமது கையாட்களாக மாற்றி, பொட்டம்மானின் பெயரில் புலம்பெயர் தேசங்களில் குழப்பத்தை விளைவித்து வருகின்றது.

இறுதி யுத்தத்தில் சிங்கள அரசிடம் விலைபோன அறிவழகன் என்றழைக்கப்படும் வி(நாய்)யகம், கொழும்பு உட்பட தென்னிலங்கையின் பல்வேறு பகுதிகளில் தங்கியிருந்த பல மறைமுகக் கரும்புலிகளையும், புலனாய்வுத்துறைப் போராளிகளையும் சிங்கள அரசிடம் காட்டிக் கொடுத்திருந்தார். அத்துடன், தென்னிலங்கையில் தமிழீழ விடுதலைப் புலிகளின் இரகசிய ஆயுதக் களஞ்சியங்களின் விபரங்களையும், சிங்கள அரசிடம் வி(நாய்)யகம் காட்டிக் கொடுத்திருந்தார். இறுதி யுத்தத்தின் பொழுது தென்னிலங்கையில் பல்வேறு தாக்குதல்களை நிகழ்த்துவதற்கான உத்தரவை தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமைப்பீடம் பிறப்பித்த பொழுதும், வி(நாய்)யகத்தின் காட்டிக் கொடுப்புக் காரணமாக அவ்வாறான தாக்குதல்கள் எவையும் நிகழவில்லை எனத் தெரிய வருகின்றது.

கடந்த ஓராண்டாக இந்தியா, இத்தாலி, அயர்லாந்து, பிரித்தானியா, பிரான்ஸ், சுவிஸ், மலேசியா எனப் பல நாடுகளுக்கு சுற்றுப் பயணம் செய்து உளவு நடவடிக்கைகளில் ஈடுபட்ட வி(நாய்)யகம், அண்மையில் காகிதப்புலிகளின் தலைவர் இராமு.சுபனுடன் கலந்துரையாடிய பின்னர் தமிழகம் சென்று, சில நாசகார நடவடிக்கைகளை ஒருங்கிணைத்து வருவதாக, கறுப்பிற்கு நம்பகமான தகவல்கள் கிடைத்துள்ளன.

இதனிடையே பிரித்தானியாவில் மக்களிடையே பல்வேறு குழப்பங்களை ஏற்படுத்தும் நோக்கத்துடன் திரு என்ற உளவாளியை வி(நாய்)யகம் களமிறக்கியுள்ளார். நரிகேசி உருத்திரகுமாரனின் பாதுகாப்புத்துறை செயலர் ஜனகன் மாஸ்ரர், அடிதடி அமைச்சர் சேகர் போன்றோருடன் இணைந்து இவர் செயற்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

**வர்த்தக விளம்பரங்கள் மற்றும் அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும்**






